மருந்து கட்டுப்பாடு இயக்குநர், தமிழ் நாடு, சென்னை– 6 அவர்களின்
செயல்முறை ஆணை

**பிறப்பித்தவர் : திருமதி. ப.வா.விஜயலட்சுமி,** பி.பார்ம்.,

ந.க.எண். 1526/நி3/2020 நாள் :17.11.2022

பொருள்: நிர்வாகம்–மருந்து கட்டுப்பாடு இயக்ககம், சென்னை–6– காலஞ்சென்ற திரு. ரா.மணி, தொழில் நுட்புநர் நிலை–I, அரசு பகுப்பாய்வாளர் அலுவலகம், மருந்து ஆய்வுக்கூடம், சென்னை–6– அன்னாரது மனைவி திருமதி.கா.மாலா, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமணம் – **பணிவரன் முறை ஆணை** – வழங்கல் –தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை(நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள்.23/01/2020
2. இவ்வலுவலக செ.மு.ந.க..எண்.1526/நி3/2020, நாள்.05.07.2021
3. அரசு கடித எண்.23243/ஏடி2/2022–1, நாள்.05/09/2022 மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, சென்னை–9

*****

**<u>ஆணை:</u>**

மருந்து கட்டுப்பாடு இயக்ககம், சென்னை–6–ன் கீழ் இயங்கி வரும் அரசு பகுப்பாய்வாளர் அலுவலகம், மருந்து ஆய்வுக்கூடம், சென்னை–6ல் தொழில்நுட்புநர் நிலை–I ஆக பணிபுரிந்து வந்த திரு.ரா.மணி அவர்கள் 17.12.2018 அன்று பணிகாலத்திலேயே காலமாகிவிட்டார். அன்னாரது மனைவி திருமதி.கா.மாலா, கருணை அடிப்படையில் அரசு பணி வேண்டி 13.06.2019 அன்று மேற்கூறிய அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளார், மேலும், பணிநியமனம் வழங்குவதற்குரிய ஆவணங்கள் மற்றும் கல்வி சான்றிதழ்களையும் அசலாக உரிய காலக்கெடுவுக்குள் சமர்ப்பித்துள்ளார்.

திருமதி.கா.மாலா, அவர்களின் பிறந்த தேதி 13.09.1974 ஆகும். தனியர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்று கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்திருந்ததால் பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசு பணியின் விதிகளின் (பணி நிபந்தனை)படி, தற்காலிகமாகக் கருணை

அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுபணியில் இளநிலை உதவியாளராக ரூ.19,500-62,000, நிலை-8 (Level-8) சம்பள விகிதத்தில் பணி நியமனம் செய்யப்பட்டு மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம், சென்னை-6ல் 16.07.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் இணைந்து பணியாற்றி வருகிறார்.

கருணை அடிப்படையில் இளநிலை உதவியாராக பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி. கா.மாலா என்பவரின் தற்காலிக பணியினை பார்வையில் கண்டுள்ள அரசாணைகள் மற்றும் அரசு கடிதத்தின் அடிப்படையில், தனியர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராக பணியில் இணைந்த நாளான **16.07.2021** முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்து ஆணையிடப்படுகிறது

பணி.வரன் முறை செய்யப்பட்டதையடுத்து தனியர் தகுதிகாண் பருவத்தில் வைக்கப்படுகிறார் மூன்றாண்டு பணிக்காலத்தில் தொடர் இரண்டாண்டு பணிக்காலத்திற்குள் அரசு அலுவலர்களுக்கான பவானிசாகர் பயிற்சியினையும், துறைதேர்வான மருத்துவ விதி தொகுப்பு தேர்வினையும் நிறைவு செய்ய வேண்டுமெனவும் தனியர் அறிவுறுத்தப்படுகிறார்,

**ப.வா.விஜயலட்சுமி**
மருந்து கட்டுப்பாடு இயக்குநர்(பொ)

**பெறுநர்**
திருமதி. கா. மாலா, இளநிலை உதவியாளர்
மருந்து கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம்,
சென்னை-600 006

**நகல்** இவ்வலுவலக பட்டியல் இருக்கை
**நகல்** இருப்பு கோப்பு / உதிரி-1
**நகல்** தனியரது பணிப்பதிவேடு

//// ஆணைப்படி அனுப்பப்படுகிறது ////

**உதவி மருந்து கட்டுப்பாடு இயக்குநர் (நிர்வாகம்)**

18/11/2022 18/11/2022 18/11/22